# சைவத் திருக்கோயில் கலை கல்வி அறவாரியம்



சிவபெருமான் திருவருளுடன் அறவாரியத்தின் உறுப்பினர், சைவ சித்தாந்த மாணவர், சிவனடியார் ஆகியோரின் திரண்ட ஆதரவு இந்த அருட்பணியை நிறைவேற்றி வருகின்றது. திட்டம் மிகப் பெரியது. திட்டத்தின் வளர்ச்சிக்கு நிதியின் வளர்ச்சியே அடித்தளம். அன்பர் அனைவரும் இதனை அறிவர். எனவே, சிவ காணிக்கை வழங்கும் வாய்ப்பினை இதுவரை பெறாத அன்பர் இப்போது வழங்கிச் சிவனருளைப் பெற்றுய்ய வேண்டுகிறோம். முன்பு காணிக்கை வழங்கிய அன்பர் மேலும் வழங்குதற்குச் சிவனருள் முன்னிற்க வேண்டுகிறோம்.

உங்கள் காணிக்கையைக் கீழ்க்காணும் அறவாரியக் கணக்கில் சேர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். சிவசிவ.

அறவாரியத்தின் சைவத் திருக்கோயில் மற்றும் கல்லூரி அமைப்புப் பணிகள் ஆலவாய் அண்ணல் சொக்க நாதப் பெருமான் திருவருளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. திருக்கோயில், கல்லூரி, அரங்கம் ஆகிய மூன்று நிலைத் திட்டங்களுக்கான வரைபடங்கள் அரசுத் துறைகளின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தற்போது நடைமுறையில் இருக்கும் கட்டுமானப் பணிகளுக்கான விதிமுறைகளுக்கு ஏற்ப வரைபடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதே சமயத்தில் திருக்கோயில் அமைவுக்கான ஆகம விதிமுறைகளையும் கைவிடாமல் வரைபடங்கள் அமைந்துள்ளன. அரசுத் துறைகளின் ஆதரவையும் வழிகாட்டலையும் பொருத்து அடுத்த கட்ட நகர்வுகள் அமையும்.

**YAYASAN FALSAFAH DAN INSTITUSI SAIVA**
**PUBLIC BANK - 3208616019**

மேலும் விவரங்கள் பெறுவதற்குத் தொடர்பு கொள்க.

**சிவத்திரு அனிதா: +60 17 614 0336**

அன்புடன்
**முனைவர் நாகப்பன் ஆறுமுகம்**
தலைவர், சைவத் திருக்கோயில் கலை கல்வி அறவாரியம்

அனைவருக்கும் சிவனருள் நிறைக!

# தெலுக் பங்லிமா காராங் சைவ சமய மன்ற நிகழ்வுகள்

தெலுக் பங்லிமா காராங் சைவ சமய மன்ற ஏற்பாட்டில் முனைவர் நாகப்பன் ஆறுமுகம் ஐயாவின் சித்தாந்த மாணவர் திருமதி ஜெகதீஸ்வரி இல்லத்தில் கூட்டு வழிபாடு நடைபெற்றது. பெருமான் திருவருளால் எளிய சிவ வழிபாடும் பதிக முற்றோதலும் இறுதியாக திரு பூபாலன் பூவன் அவரின் சிற்றுரையும் இடம்பெற்றது.

*நாள்: 15.08.2020*
*நேரம்: இரவு மணி 7.30*
*இடம்: கிள்ளான்*







திருமதி ஜெகதீஸ்வரி குடும்பத்தினரும் சித்தாந்த மாணவரும் இக்கூட்டு வழிபாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆசிரியர் / Editor: முனைவர் நாகப்பன் ஆறுமுகம் / Dr. Nagappan Arumugam MA., Ph.D.
**Published by: MATHESAN ENTERPRISE**, A01-02, Palm Court, Jalan Berhala, 50470 Kuala Lumpur. H/P: 016-9691090
**Printed by: PERCETAKAN CHEMY SDN BHD**, NO 131&135, Jalan Sultan Abdul Samad, Brickfields, 50470 Kuala Lumpur

சிவனருள் ஆசிரியர் குழு :
சிவத்தமிழ்செல்வர் முனைவர் நாகப்பன் ஆறுமுகம்
சிவத்திரு அன்பரசன் அருணாசலம்
சிவத்திரு கமலநாதன் முனுசாமி